**மொத்தமாக நாணயக் குற்றிகளை வழங்கும் போது இலங்கை மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்படுகின்ற வழிமுறைகளும் அதற்கான பொதுமக்களுக்குரிய அறிவுறுத்தல்களும்**

1. நாணயக் குற்றிகளைக் கொண்ட ஒரு மரப்பெட்டி அல்லது மரப்பெட்டிகளை வழங்குதல் "மொத்தமாக நாணயக் குற்றிகளை வழங்குதல்" என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

2. இலங்கை மத்திய வங்கியானது, பின்வரும் முறைகளில் ரூ.10, ரூ.5, ரூ.2, ரூ.1 போன்ற நாணயப் பக்கற்றுக்களை மாத்திரம் கொண்ட மரப்பெட்டிகளை பொதுமக்களுக்கு வழங்கும்.

| நாணயத்தின் முகப்பெறுமதி | ஒரு பெட்டியிலுள்ள நாணயங்களின் எண்ணிக்கை | ஒரு பெட்டியிலுள்ள நாணயக் குற்றிகளின் பெறுமதி (ரூபாயில்) |
|---|---|---|
| ரூ.1 | 10,000 | 10,000 |
| ரூ.2 | 8,500 | 17,000 |
| ரூ.5 | 7,500 | 37,500 |
| ரூ.10 | 6,500 | 65,000 |

3. மொத்தமான நாணயக் குற்றிகளுக்கான ஒவ்வொரு கோரிக்கைகளும் குறைந்தளவு ரூ.1 நாணயக் குற்றியின் ஒரு பெட்டியாவது (பெறுமதி ரூ.10,000) சேர்த்துக்கொள்ள வேண்டும்.

4. ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் (நிறுவனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர்) மொத்தமாக நாணயக் குற்றிகளை பெற்றுக்கொள்ள விரும்புமிடத்து அதற்கான விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து பெற்றுக்கொள்ளும் தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக நாணயத் திணைக்களத்திடம் கையளிக்க வேண்டும் அல்லது காசுக் கருமபீடத்தின் (தொலைநகல் இல. 011 2477705/ 011 2477726) இற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

5. இக்கருமபீடமானது, அரச மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர்ந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் பொதுமக்களுக்காக திறந்துவைக்கப்பட்டிருக்கும்.

6. குறிப்பிட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் அறிவுறுத்தல் படிவத்தினை நாணயத் திணைக்களத்தின் காசுக் கருமபீடத்தில் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் www.cbsl.gov.lk எனும் வெப்தளத்திலும் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

7. நாணயக் குற்றிகள் பரிமாற்றத்திற்கு தொடர்பான கொடுப்பனவினை (பெற்றுக்கொள்ளும் நாணயக் குற்றிகளுக்கான பெறுமதியின்) நாணயக் குற்றிகள் பெற்றுக்கொள்ளும் அதே தினத்தில் காசுக் கருமபீடத்தில் செய்யப்படவேண்டும். கொடுப்பனவு செய்யப்படும் நேரத்தில் முன்னதாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் காசுக் கருமபீடத்தில் கையளிக்கப்படவேண்டும்.

8. வாடிக்கையாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு இடம்பெற்ற கொடுப்பனவிற்கு காசுக் கருமபீடத்திலிருந்து பற்றுச்சீட்டு ஒன்று வழங்கிவைக்கப்படும்.

9. நாணயக் குற்றிகளை சேகரிப்பு செய்வதற்காக வருகின்ற நபர் அவருடைய தேசிய அடையாள அட்டையினை இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்புத் தேவைப்பாடுகள் அனைத்தையும் பின்பற்றுதல் அவசியம்.

10. கோரிக்கை விடுத்த நபரும் உள்ளடங்கலாக இரு நபர்களுக்கு மாத்திரமே நாணயத் திணைக்களத்தின் வழங்கல் பிரதேசத்திலிருந்து நாணயக் குற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் வளாகத்திற்குள் வருவதற்கு அனுமதியளிக்கப்படுகின்றது.

11. காசுக் கருமபீடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை குறிப்பிட்ட மொத்தமான நாணயக் குற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கு மொத்த வழங்கல் பிரிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. மொத்தமாக நாணயங்களை வழங்குதல் மு.ப.10.00 மிணியிருந்து மதியம் 12.00 மணி வரை நடைபெறும் என்பதுடன் நாணயக் குற்றிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் வளாகத்திலிருந்து உடனடியாக தங்களுடைய வாகனங்களை வழங்கப்பட்ட நாணயக் குற்றிகளுடன் வெளியில் எடுத்துச்செல்வதற்கு வாடிக்கையாளர் ஒழுங்குமுறைகளை எடுத்தல் வேண்டும்.

13. வழங்கப்பட்ட நாணயக் குற்றிகளை பாதுகாப்பான முறையில் எடுத்துச்செல்வது முற்றுமுழுதாக வாடிக்கையாளரின் பொறுப்பு என்பதுடன் இலங்கை மத்திய வங்கியானது வாடிக்கையாளருக்கு நாணயக் குற்றிகளை வழங்கி வைத்ததன் பின்னர் எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க:-


இலங்கை மத்திய வங்கி : தொலைபேசி : 011 2477371/ 011 2477130

மின்னஞ்சல் : currency@cbsl.lk

கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
இலங்கை